# சைவசித்தாந்தத்தில் காட்சியளவை - ஒரு மெய்யியல் பகுப்பாய்வு

தி. திலீபன்.

**ஆய்வுச்சுருக்கம்**

இவ்வாய்வானது இந்திய மெய்யியலில் காட்சியளவை பெறும் முக்கியத்துவத்தினைச் சைவசித்தாந்தத்தினை அடிப்படையாகக் கொண்டு ஆய்வுசெய்யப்பட்டுள்ளது. இந்தியத் தரிசனங்களை அருளிச்செய்த ஞானிகள், ரிஷிகள் பிரமாணங்களை அடிப்படையாகக் கொண்டே, மெய்ப்பொருட்களின் உண்மைத் தன்மையினை உலகத்தவர் உய்யும் பொருட்டு அருளிச் செய்திருக்கின்றனர். இந்தியத் தரிசனங்களுள் சிறப்பானதொன்றாக விளங்கும் சைவசித்தாந்தமானது, பதி, பசு, பாசம் ஆகிய முப்பொருட்களின் உண்மைத் தன்மையினை மூவகைப் பிரமாணங்களை அடிப்படையாகக் கொண்டே விளக்கியுள்ளது. இருந்தும், இப்பிரமாணங்களில் காட்சியளவையே உயர்வாகப் போற்றப்பட்டுள்ளது. இதற்குச் சான்றாக, பரந்து காணப்படும் உலகம் காண்பதற்கரிய கடவுள் ஒருவனால் தோற்றுவிக்கப்பெற்ற உள்பொருளே என்பதும், "யாது யாண்டு ஒடுங்கும் அஃது அதனில் உற்பத்தியாம் அதாவது காட்சியளவையால் கண்டுணரும் உலகினை ஒடுக்கிய இறைவனே மீளத் தோற்றுவிப்பவனாவான் என சைவசித்தாந்தம் விளக்கமளிக்கிறது. இந்தவகையில், சைவசித்தாந்தத்தில் முக்கியத்துவம் பெறும் காட்சியளவை பற்றி ஆய்வு செய்வதே ஆய்வின் நோக்கமாகும். இவ்வாய்வானது ஒப்பீட்டு முறை, பகுப்பாய்வு முறை போன்ற முறையியல்களை அடிப்படையாகக்கொண்டு இவ்வாய்வுடன் தொடர்புடைய நூல்களினை இரண்டாம்நிலைத் தரவுகளாகக் கொண்டு ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

**திறவுச்சொற்கள்** : காட்சியளவை. பதி. பசு. பாசம். மெய்ப்பொருள். சைவசித்தாந்தம்

**அறிமுகம்**

மேலைத்தேய மெய்யியலில் அறிவினைக் கட்டமைப்பதற்கு பல்வேறுபட்ட முறையியல்கள் பயன்படுத்தப்பட்டிருப்பது போல இந்திய மெய்யியலில் உண்மைப் பொருட்கள் பற்றி ஆய்வு செய்வதற்கு பல்வேறுபட்ட அளவைப் பிரமாணங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இம்மெய்யியல் மரபுகள் இரண்டிலும் உண்மை அல்லது மெய்மை பற்றிய தேடலாகவே அறிவாராய்ச்சியியற் சிந்தனை விளங்குகிறது. இருந்தும் இவ்விரு மரபுகளும் பெரிதும் மாறுபட்ட விடயங்களையே உண்மையென்றும் அறிவென்றும் முன்மொழிகின்றன.[1]

இந்திய மெய்யியலை 'தரிசனங்கள்' என்றும் அழைப்பர். தரிசனம் என்பது 'உண்மையைக் காணுதலாகும்'. (தரிசனம் என்ற சொல் 'திருக்ஷ்டி என்ற வடமொழிச் சொல்லடியிலிருந்து தோற்றம் பெற்றதாகும். திருக்ஷ் என்பது பார்வை அல்லது காட்சி எனப்பொருள்படும்) குறிப்பாகத் தரிசனங்கள் ஆத்மீகம் சார்ந்ததாகவும், மனித விடுதலையை மையப்படுத்தியதாகவும் அமைகின்றது. எல்லாவற்றினையும் 'ஏகான்மா' என்றடிப்படையில் காணுதல் இந்தியத் தரிசனங்களின் பண்பு என டாக்டர். சர்வப்பள்ளி இராதாகிருஸ்ணன் குறிப்பிட்டிருந்தமை சிந்திக்கத்தக்கதாகும்.[2]

இந்தியத் தரிசனங்களுள் வைதிக, அவைதிகத் தத்துவங்களானவை ஆத்மீக ரீதியான மெய்ப்பொருள் விடயங்களையும் உலகியல்சார் தத்துவங்களையும் அளவைப் பிரமாணங்களை அடிப்படையாகக்கொண்டு நிறுவியிருக்கின்றன. இத்தத்துவங்கள்

---

முதுதத்துவமாணி ஆய்வாளர், பேராதனைப் பல்கலைக்கழகம்.
thileepan1983@yahoo.com